ஒத்துழைப்பைப்பெற்று தீவிரத் தடுப்பு இயக்கம் நடத்த அரசாங்கம் ஆலோசனைசெய்துள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்படிப்பட்ட கடமைகளைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக மலேரியாத் தடுப்பு வாரம் நடத்தப்படுகிறது. இதைத்தவிர ஃபிலேரியா யூனிட்டுகள் எட்டு இடங்களில் சென்ற ஆண்டு அமைக்கப்பட்டன. இந்த ஆண்டும் அமைக்கப்பட்டு பொதுமக்கள் உணரத் தக்க வகையிலே நிகழ்ச்சிகள் நடத்துகிறோம். மிகப் பெரிய அளவிலே இதைச் செய்யவேண்டுமென்பது எதிர்காலத்திலே ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகும்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, நகரங்களிலே கொசுத் தொல்லைகளைக் காட்டிலும் கிராமப்புறங்களிலே கொசுத் தொல்லைகள் மிக அதிகமாக இருக்கின்றன. மலேரியா ஒழிப்புத் திட்டங்கள் கிராமப்புறங்களிலே நடத்தப்படுகின்றன என்றாலும் இன்னும் மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தீவிரமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யக்கூடிய வகையில் கிராமங்களிலும் இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய அரசு உதவக்கூடிய ஒவ்வொரு துறையிலேயும் முழுத் தொகையும் பெற்றுத்தான் மாநில அரசு செய்துவருகிறது. அந்தத் தொகையை நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையிலும் இழந்துவிடவில்லை. அவர்களும் சில அடிப்படைகளை வைத்து ஓரளவுக்கு வழங்கிவருகிறார்கள். எனவே குறிப்பிட்ட வட்டாரங்களில் வட்டாரம் வட்டாரமாக நிறைவேற்றி வருகிறோம். ஏற்கனவே ஒருமுறை மலேரியா ஒழிப்புத் திட்டம் பல இடங்களில் நிறைவேற்றப்பட்டு அப்படிப் பட்ட பகுதிகள் எல்லாம் இப்பொழுது மெயின்டனன்ஸ் ஸ்டேஜ்க்கு வந்திருக்கின்றன. மறுபடியும் தீவிர ஒழிப்புத் திட்டம் எல்லா இடங்களிலும் செயல்படுத்தப்படவேண்டுமானால் அதற்கு இந்திய அரசினுடைய பொருளாதார நிலையும் தமிழக அரசினுடைய பொருளாதார நிலையும் இடம்தரக்கூடிய ஒன்றல்ல.

கும்மிடிப்பூண்டியிலுள்ள இயங்கும் மருத்துவமனை

* 45 வினா—திரு. ரா. ரா. முனுசாமி:

டாக்டர் திரு. எச. வி. ஹாண்டே:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் செயல்படுகிற இயனூர்தி மருத்துவமனை மூடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட இயங்கும் மருத்துவமனை கும்மிடிப்பூண்டியில் 8—1—1971 முதல் 31—8—1971

வரை இயங்கியது. அதற்குப் பின்னர் 1—9—1971 முதல் செங்கற்பட்டு மாவட்டம் காட்டான்குளத்தூரில் இயங்கிக் கொண்டுள்ளது.

DR. H. V. HANDE : Is it not a fact that this mobile dispensary was started sometime ago? Due to some unforeseen circumstances or due to some other cause, this was given up in the middle? If so, what are the reasons therefor?

THE HON. THIRU K. ANBAZHAGAN : I am not aware of such an instance with regard to the mobile dispensary. There is nothing like that in Gummidipoondi. It was working for a long time. In the beginning it was not functioning properly because necessary assistance was not given by other doctors. After a month, operation and other things were started. கும்முடிப் பூண்டியில் இப்பொழுது இயங்கவில்லை, 6, 7 (மாதங்களுக்கு முன்னுல் இயங்கியது.

MR. SPEAKER : The hon. Member Dr. Hande's point is whether it was suspended?

DR. H. V. HANDE : My point is why it was given up ? Originally it was started there. I remember distinctly. It would go daily to Gummidipoondi. Original idea was from Stanley hospital it would go there. That is why it was called ' mobile '. It would be moving. It would not go there to one particular place and stop there. Once a week it would go to Gummidipoondi. That was the idea. But it was stopped. May I know the reason for the stoppage?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, the hon. Member has not distinguished between mobile dispensary and mobile hospital. This is a programme of mobile hospital. It is intended that most of the experts will be sent to a place for a long time, about a month or two and almost all the persons of that area will be attended to by the experts. The service is given there for two or three months and then the mobile hospital is transferred from one locality to another, so that the services of the specialists of the Medical College are made available to the villages. Therefore, it is not considered to be a mobile dispensary and therefore, there is no question of moving it every week or every day. But even if there is a question about this hospital, it is not able to move from that place where it is situated for about six months, but after convincing the people it is transferred from one place to another.

சோழவந்தானிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை

** 46 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—*

மதுரை மாவட்டம், சோழவந்தானிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?